# தமிழிலக்கியங்களில் விழுமியக் கூறுகள் – மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை)யை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**Prof. Dr. S. Kesavan**
*Professor in Hindu Civilization, Department of Hindu Civilization*
*Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka*

**Miss. S. Vevoka**
*M.Phil (Scholar), Department of Hindu Civilization*
*Faculty of Arts and Culture,Eastern University, Sri Lanka*

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7718

***ஆய்வுச் சுருக்கம்***

*பத்துப் பாட்டு இலக்கியங்களில் பத்தாவதாக விளங்குவது மலைபடுகடாம் எனும் இலக்கியமாகும். இது மலைபடுகடாம் எனவும் கூத்தராற்றுப்படை எனவும் அழைக்கப்படுகின்றது. இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்க் பெருங்கௌசிகனார், மல்குன்றக்கோட்டத்துச் செங்கண்மாத்து வேள் நன்னன் சேய் நன்னைப் பற்றிப் பாடிய நூலாகும். ஆற்றுப்படை இலக்கியங்கள் வழியே அன்றைய சமுதாய நிலை, சமய நிலை, இயக்கியச் சிந்தனை, புலவர் திறன், வரலாற்று உண்மைகளை அறிய முடிகின்றது. ஈகையும் தமிழர் தம் வாழ்வியலும் கொடைச்சிறப்பும். உதவுவதில் ஏற்படுகின்ற மன நிறைவும் வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பதை ஆற்றுப்படை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. சங்க கால கலைஞர்கள் இசைக்கலையில் சிறந்து விளங்கினர் என்தபற்கு கூத்தாற்றுப்படையில் பேரியாழின் சிறப்பு இசைக்கருவிகள், முறுக்கிய நரம்புகள், வரகின் கதிர் போன்ற துளைகள், பத்தல், யானைக்கொம்பிலான யாப்பு உந்தி கோடு வணர் எனும் பலவிதமான உறுப்புகளைக் கொண்டிருந்ததனை இங்குள்ள பாடல்கள் மூலம் காணலாம். அத்துடன் கலைஞர்களை ஆதரிக்கும் இலக்கியங்களாகவும் காணப்படுகின்றன. அந்தவகையில், ஆற்றுப்படை இலக்கியமான கூத்தராற்றுப்படை இலக்கியத்தில் ஆற்றுப்படுத்தலினைத் தாண்டியும் விழுமியக்கருத்துக்கள் பற்றியும் எடுத்துரைக்கு மாற்றினை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.*

***திறவுச் சொற்கள்:*** *தமிழ் இலக்கியம், மலைபடுகடாம், கூத்தராற்றுப்படை, விழுமியக் கருத்துக்கள், வாழ்வியல் கருத்துக்கள்.*

## அறிமுகம்

ஆற்றுப்படுத்தல் நூலாக எழுதப்பட்டதே மலைபடுகடாம் எனும் கூத்தராற்றுப்படை எனும்நூலாகும். ஆற்றுப்படை என்பது ஆறு படை எனப் பிரிக்கப்பட்டு வழிப்படுத்தல், வழிவழியாக நடந்துசெல்லுமாறு கூறுதல் எனப் பொருள்படும். வள்ளல் ஒருவனிடத்தே பரிசுபெற்று வரும் ஒருவன், வழியில் வரும் வறியவனான கலைஞனை, வீரனை தான் பெற்ற பொருள் வளத்தை இன்னார்பால் பெற்றேன்.

நீயும் சென்றால் பெறலாம். அவ் வள்ளலின் நாடு இது. அதற்குச் செல்லும் வழி இது. இன்னின்ன இடங்களில் தங்கி, விருந்துண்டு இளைப்பாறி அவனுடைய மாளிகையை அடைந்து இன்முக வரவேற்பினை ஏற்று, விருந்தினராய் விளங்கி, அவன் தரும் அளவிலாப் பரிசில்களைப் பெற்று, பிரியாவிடை பெறும் பெரும் நிலையைக் கூறி அவனிடம் ஆற்றுப்படுத்துவதேயே ஆற்றுப்படை நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன. அத்துடன், மலைக்கு யானையை உவமித்து அதன்கண் பிறந்த ஓசையைக் கடாமெனச் சிறப்பிப்பதனால் இப்பாடல்களை மலைபடுகடாம் என்றும் குறிப்பிடுகின்றனர்.

பத்துப்பாட்டு நூலினுள் நிறைவாக வைத்து எண்ணப்படும் நூல் மலைபடுகடாம் ஆகும். இதனை இயற்றியவர் இரணிய முட்டத்துப் பெங்குன்றூர் பெருங்கௌசிகனார் ஆவார். இவருடைய ஊர் குன்றூர் என்றும் இவர் ஓர் அந்தணர் என்பதும் குறிப்பிடத்தக்கது. யாழ் போன்ற இசைக் கருவிளை மிக நுணுக்கமாக அறிந்தவர். அத்துடன் நன்னனின் நவிரமலை பற்றியும் நன்கு அறிந்துள்ளார்.

கூத்தன் ஒருவன் பிற கூத்தர்களை ஆற்றுப்படுத்துவதாய் 583 பாடலடிகளில் அமைந்துள்ள இந்நூலானது, பாடாண் திணையில் (துறை), அகவல்பாவில் (பா வகை) பாடப்பட்டுள்ளது. மலைபடுகடாம். சங்க கால நூல்களில் மலைபடுகடாம் ஒன்றே பதின்மூன்று இசைக்கருவிகள் பற்றிக் கூறித் தனிச்சிறப்பு பெறுகிறது. பெருங்கௌசிகனார் இசை மீது பற்றுக் கொண்டிருந்ததால் தான் பல்வேறு இசைக்கருவிகளை ஊன்றிக் கவனித்துள்ளார். மேலும் இசை சார்ந்த உவமைகள் பலவற்றை அவர் ஆங்காங்கே தொட்டுக் காட்டியிருப்பதிலிருந்தும் இசைக் கருவிகள் மற்றும் இசை மீது கொண்ட பற்றினையும் காணமுடிகின்றது.

இந்நூலின் பாட்டுடைத் தலைவன் செங்கண்மாத்துவேள் நன்னன் சேய் நன்னன் எனும் அரசனாவான். இவன் ஒரு சிவபக்தன் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவன் கொண்கான நாட்டில் ஏழில் மலையையும், பாரம் என்ற நகரையும் ஆண்ட நன்னனின் மகன் என்பதை மலைபடுகடாம் நூலின்வழியும், நச்சர் உரை வழியும் பிற சங்கநூல் சான்றுகள் வழியும் உறுதிப்படுத்த முடிகிறது. கொண்கான நன்னன் பெண்கொலை புரிந்ததால் புலவர்கள் அவனையும் அவன் மரபினரையும் பாட விரும்பவில்லை என்பதைப் புறநானூறு வழியறியமுடிகின்றது. கொண்கானம் என்பது இன்றைய கேரளத்தின் வடபகுதியாகவும், துளு பேசும் பகுதியாகவும் உள்ளதை அறிஞர் பி.எல்.சாமி குறிப்பிட்டு எழுதியுள்ளார். (செல்வி. கட்டுரை,ப:4).

மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பவற்றின் உருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்துஉள்ளதே விழுமியம் ஆகும். விழுமியங்களை நேர்மையுடனும் தொடர்ந்தும் கடைப்படிக்கும் போதே விழுமிய உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும். மனித விழுமியம் தனி மனித விழுமியம், பண்பாட்டு விழுமியம் என இரு வகைப்படுகின்றது. ஒரு சமுதாயத்தில் விழுமியங்கள், கதைகள், பழமொழிகள், சமயம் என்பவற்றினூடாக வெளிப்படுத்தப்படுகின்றது. தமிழர்கள் மத்தியில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், திருக்குறள், பழமொழிகள் என்பன ஊடாகவும் வெளிப்படுத்தப்படுகின்றன. அந்தவகையில் கூத்தராற்றுப்படையில் வெளிப்படுத்தப்படும் விழுமியக் கருத்துக்கள் பற்றி நோக்குவோம்.

## விழுமியக் கருத்துக்கள்

1. **ஈகை**

மன்னன் நன்னன் பகை வென்று புலவரை அணைக்கும் பண்பினன். புகழ்வோரை வரவேற்று பரிசில் வழங்கும் இயல்புடையவன் ஈகை பண்பற்றோர் இறந்ததும் மறக்கப்படுவர். புகழடைந்து நிலைப்போர் எல்லாம் வறியவர்க்கு ஈந்து அவர்களின் வாழ்வை வளமாக்கியவரே என்பதனை,

**“இலமென மலர்ந்த கைய ராகித்**
**தம் பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்.........”**

***(மலைபடுகடாம், பாடலடி:552 - 553)***

என்ற வரிகள் உணர்த்துகிறது.

### *2. பரஸ்பர உறவை மேம்படுத்தல்*

நன்னனின் அரண்மனை முற்றத்தை அடையலாம். அம்முற்றத்திலே நன்னனுக்கு மக்கள் அன்பாய் வழங்கிய பொருட்கள் குவிந்து காணப்படுகின்றன. அப்பொருள்களில் ஒன்றாக “ஊமை எண்கின் குடாவடிக் குருளை” (மலைபடுகடாம், பாடலடி: **501**) எனும் வாய் திறவாக் கரடிக் குட்டியைக் காணலாம். மேலும் “வரை வாழ் வருடை” என்ற சொற்றொடர்“வருடை” எனும் மலை ஆட்டைக் காட்டுகிறது. இந்த வருடைக்கு எட்டுக் கால்கள் இருந்தன. இதற்கு முதுகிலும் கால்கள் உண்டு. என்று நீலகேசி கூறும். மானின் கன்று, யானையின் சிறு கன்று, சிறிய கீரி, காட்டுக் குதிரை, உடும்பு, மயில், காட்டுச் சேவல், பலாப்பழம், சாறுள்ள பழம், நறைக் கொடி, கற்புரம், நூறைக் கிழங்கு, காந்தட்பு, நாகப்பு, சந்தனம், பச்சை மிளகு, மூங்கிற்குழாயில் ஊரிய தேன், கள், தயிர், தேன் அடைகள் போன்ற பல பொருள்கள் அங்கே குவிந்து கிடக்குமாம். ஏன்பதனை,

**“குடமாலை பிறந்த தண்பெருங் காவிரி**
**கடன்மண் டழுவத்துக் கயவாய் கடுப்ப.”**

***(மலைபடுகடாம், பாடலடி)***

என்ற அடிகள் மூலம் கௌசிகனார் பாடி இருக்கிறார். காவிரி ஆறானது பல பொருள்களை அடித்துக் கொண்டு வந்து சேர்க்கும் புகார் போல நன்னனுடைய முற்றமானது விளங்கியதாம் எனக் குறிப்பிடுவதன் மூலம் நன்னனின் முற்றத்தில் உள்ள பொருள்கள் பல மக்களால் தரப் பட்டவை என்பதால் மக்கள் மன்னனிடம் எந்த அளவு அன்பு வைத்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

### *3. பஞ்சமா பாதகங்களை தவித்தல்.*

#### *களவு மறத்தல்*

கூத்தர்கள் மன்னனிடம் பொருள் வளம்பெற செல்லும் மலையின் காட்டுப் பாதையில் வழிப்பறி செய்யக்காத்திருக்கும் கானவர்கள், துன்பம் எதுவும் விளைவிக்காது கூத்தர்களிற்குத் துணைபுரிவதுடன், கண்ணிற்கெட்டிய தூரம் நெருங்கித் தழைத்திருக்கும் மரம் அடர்ந்த காட்டில் படுக்கவைத்தது போன்ற பாறைகளும், நிறுத்தி வைத்தது போன்ற பாதை வழிகளும் இருக்கும். வில்லம்பு வைத்திருக்கும் கானவர் அந்த இடங்களில் உங்களுக்குத் துணையாக வருவார்கள். துன்பம் செய்யாமல் வழிகாட்டுவர். என்பதனை,

**“எடுத்து நிறுத்து அன்ன இட்டு அரும்ப சிறு நெறி**
**தொடுத்த வாளியர் துணை புணர் கானவர்.”**

***(மலைபடுகடாம், பாடலடி:14 - 18)***

எனும் பாடலடி மூலம் அறியமுடிகின்றது.

#### வாய்மை

மன்னன் எவ்வழியோ அவ்வழியே மக்களும் பின்பற்றுவர் என்பது முதுமொழி. அதேபோன்றே மலைபடுகடாமில் குறிப்பிடப்படும் மன்னனே வாய்மை உடையவனாகக் குறிப்பிடப்படுகின்றான். எனின் மக்களும் வாய்மையுடையவர்களாளவே விளங்குவர் என்பதும் புலனாகின்றது. இதற்கு எடுத்துக் காட்டாக,

**“விருந்தின் பாணி கழிப்பின் ‘நீள்மொழிக்**
**குன்றா நல்லிசை..”**

***(மலைபடுகடாம், பாடலடி: 539-545)***

இதில் புதியனவாகப் பாடப்படும் பாடல்களைப்பாடி“வாய்மையில் குறைதல் இல்லாத நல்ல புகழுடைய வழியில் சென்றவர்களின் வந்தவனே! துங்கள் பெயர் இங்கு அழியாது உலகம் உள்ளவரை நிலைத்து நிற்கும் படி நல்லதையும் தீயதையும் ஆராய்ந்து அறியும் வள்ளல்கள் இறந்தால் அவர்கள் மேற்கொண்ட கொடையை மேற்கொண்டு கடனை முடித்த செம்மலே! ஏன மன்னன் போற்றப்படுவதில் இருந்து மன்னனின் வாய்மை வெளிப்படுத்தப்படுகின்றது.

**கடவுள் வழிபாடு**

நஞ்சுண்ட சிவனின் கோயிலும் அங்கு இருந்தது. இதன் ஆற்றலை எண்ணி உலகம் அஞ்சிக்கிடந்த காலமாகும். இருள் நீக்க எழும் இளஞாயிறு போன்ற புகழைக் கொண்டவன் நன்னன். அவனது முன்னோர் பின்பற்றிய நெறி பிறழாது இவனும் பகைவரை நூலிலாட்டி வென்ற தன் வீரர்களிற்குக் கொடை நல்கும் கடப்பாடு உடையவனாய் விளங்கினான். அவனது அரண்மனை மூதூரைச் சுற்றி மதிலும் அகழியும் இருந்தன. ஆதன் புகழைப் பலரும் புகழக் கேட்டுக் கேட்டு போர் வீரர்களை வள்ளுவர் வில்லேர் உழவர் என்கிறார். அத்துடன் வளைந்த கால்களை உடைய முதலைகள் கல்லில் ஏறும் நீரலை மோதும் ஆய்ந்த அகழி இருக்கும். அதைப்போல் வானளாவிய மதில்கள் இருக்கும் மூதூர் எனப் புகழப் படுகின்றதனையும் காணலாம். அந்தப் புகழ் அங்குள்ள மக்களிற்குச் செல்வக்கிடையதகவும் மாறியிருந்தது. இங்கு நன்னனை புலவர்கள் “வேள்” என்று குறிப்பிடப்படுகின்றான். முருகனைச் சேஎய் என்று தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதனைக் காணலாம். இதனூடாக இங்கு முருக வழிபாடு சிறப்பாக காணப்பட்டுள்ளதனைக் காணலாம்.

**“நீர் அகம் பனிக்கும் அஞ்சுவரு கடும் திறல்**
**பேர் இசை நவிரம் மேஎய் உறையும்.”**

***(மலைபடுகடாம், பாடலடி:85-94)***

இதனை இப்பாடலடியுடாகக் காணலாம். அத்துடன் மலையின் கடவுளான முருகனிற்கு முதல் மரியாதை செலுத்தும் வழக்கத்தினையும் இங்கு காணலாம்.

**“உரும் உரறு கருவிய பெரு மலை பிற்பட**
**இறும்புது கஞலிய இன் குரல் விறலியர்”**

***(மலைபடுகடாம், பாடலடி:345-360)***

ஏன அமைந்துள்ள பாடலடிகளில்,இனிய குரல் அமைந்த விறலியர்கள் (பாணர்களின் மனைவியர்) மகிழ்ச்சிப் பெருக்கில் இனிய குரலோடு குறிஞ்சிப் பண்பாடுவதனைக் கேட்டுக்கொண்டே, இடி முழக்கத்துடன் மேகம் மேயும் மலையின் புதுமைப் பொலிவைப் பாராட்டிக் கொண்டும் மலைத் தெய்வத்தை (முருகனை) கைகூப்பித் தொழுது கொண்டும் செல்லுங்கள் என அமைந்துள்ள இப்பாடலடிகள் மூலம் முருக வழிபாடு சிறப்பாக வழிபடப் பட்டமை கண்கூடு.

நன்னனின் நாட்டிற்குச் செல்லும வழியில் மராமரத்தின் அடியில் நன்னனின் படை மறவர்கள் போரிட்டு இறந்ததன் நினைவாக அவர்களுக்குப் பெயரும், பீடும் எழுதி நடப்பட்டுள்ள நடுகல் இருக்கும் (மலைபடுகடாம், பாடலடி:394-98) எனக் குறிப்பிடுவதிலிருந்து நடுகல் வழிபாடு இடம் பெற்றரமயினை அறியமுடிகின்றது.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் நன்னனது நாட்டு மக்களது தலையாய பழக்கவழக்கங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இது தமிழர்களது பண்பாடாகும். அத்துடன் படுகர் மக்கள் வீட்டிற்குள் யாரையும் கேட்காமல் உள்ளே செல்லலாம். உரிமை உள்ளவர்கள் போல வீட்டில் உள்ளவர்களோடு அளவளாவலாம். நெடுந்தொலைவு நடந்துவந்த வருத்தம் போகும்படி அவர்கள் இனிமையாக உரையாடுவர். அத்துடன் ஆட்டுக்கறி போட்டு நெய்யுற்றிச் சமைத்த தினையரிசிப் பொங்கல் சோறும் உண்ணத் தருவார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதனைக் காணலாம். இதனை,

**“கிழவியர் போல கேளாது கெழீஇ**
**சேண் புலம்பு அகல இனிய கூறி”**

***(மலைபடுகடாம், பாடலடி:158-169)***

எனும் பாடலடிகள் மூலம் காணலாம். அத்துடன் மலைபடுகடாமில் 455-470 வரையான பாடலடிகள் ஊடாகவும் விருந்தோம்பல் சிறப்பாக இடம்பெற்றமையினையும், உழவர்கள் விருந்தோம்பலை எவ்வாறு மேற்கொண்டனர் என்பதனையும் அறிய முடிகின்றது.

### குறிப்பறிந்து உதவுதல்

ஒருவரின் மனம் அறிந்து உதவி செய்வதனை விடப் பெரிய விடயம் யாது மில்லை. இதனை,

**"பாடு இன் அருவி பயம் கெழு மீமிசை**
**காடு காத்து உறையும் கானவர் உளரே."**
***(மலைபடுகடாம், பாடலடி:280)***

எனும் பாடலடிகளில்வெயில் படாத மரமடர்ந்த காடாயினும், மக்கள் நடமாட்டம் இல்லாத நேரத்திலும் மானைத் தேடிக் கொண்டு குறவர்கள் வில்லும் கையுமாக அலைவர். ஆவர்களே திசை தடுமாறும் ஞாயிறு தெரியாகக் கானகம் அது. அக்குன்றுகளிற்குச் சென்றால் பாறைமீது அமர்ந்துகொண்டு உங்களுடைய இசைக் கருவிகளை முழக்குங்கள். காட்டைக் காப்பாற்றிக்கொண்டு வாழும் கானவர்கள் அங்கெல்லாம் இருப்பார்கள். வழி தவறியவர்களிற்கெல்லாம் உதவ ஓடோடி வருவார்கள். தண்ணீரின் ஓசை போல் பாதுகாப்புக் குரல் கொடுத்துக் கொண்டே உங்களிடம் வந்து சேர்வார்கள். என்று குறிப்பிடுவதன் மூலம் காணலாம்.

### கலைஞர்களை ஆதரித்தல்

இந்நூலில் இசைவாணர்களான பாணர்களும், கூத்தர்களும் மிகவும் சிறப்பிக்கப்பவதுடன், அவர்களிற்கு மன்னன் பொருள், மற்றும் பொள் கொடுத்து பாராட்டி கௌரவிப்பதனையும், அவர்களிற்கு வேண்டிய உபசாரங்களையும் மேற்கொண்டு கலைஞர்களை ஆதரிப்பதனைக் காணலாம். எடுத்துக்காட்டாக, பின்வரும் பாடலை நோக்கின்,

**"இழை மருங்கு அறியா நுழை நூற் கலிங்கம்**
**எள் அறு நிறப்பின் வெள் அரைக் கொளீது."**
***(மலைபமுகடாம், பாடலடி:560-583)***

இதில் நன்னனுடைய கொடைச்சிறப்புக் குறிப்பிடப்படுவதுடன் கலைஞர்களை எவ்வாறு ஆதரித்துக்கௌரவப்படுத்தினான் என்படும் கண்கூடு,

### ஏற்றத் தாழ்வின்றி அனைவரையும் மதித்தல்

திறமையிலும் சரி வயதிலும் சரி பெரியவர்களை மதித்து அவர்களிற்கான உரிய மரியாதையுடன் அவர்களை அனுசரித்து அவர்களின் திறமைக்கான மதிப்பளித்து அவர்களிற்கு கொடை அளிப்பவனாக நன்னன் காணப்படுகின்றான். இதனை,

**"உயர்ந்த கட்டில் உரும்பு இல் சுற்றத்து**
**அகன்ற தாயத்து.."**
***(மலைபடுகடாம், பாடலடி:550-560)***

எனும் பாடலடிகளில் நன்னன், உயர்ந்த அரசையும், கொடுமையில்லாத அமைச்ச ரவையையும் அகன்ற நாட்டினையும் உடையவனாக இருப்பினும், சுருங்கிய அறிவுடன் பரிசில் வேண்டி வந்தவர்க்கு இல்லை என்னாது விரித்த கையினராய் கொடை வழங்குவான் எனவும் கொடை வேண்டி வந்தவர்களை தக்க மரியாதையுடன் உபசரித்தான் எனவும் குறிப்பிடப்படுவதிலிருந்து

### அன்பு செலுத்துதல்

அன்பு செலுத்துதல் மிகவும் சிறந்த விழுமயப்பணிபாகும். இதனை குறவர்கள் தமது திணைப்புலம் காக்கும் செயல் ஊடாகக் காணலாம், அதாவது அவர்கள் அங்குவரும் பறவைகளையோ அல்லது விலங்குகளையோ கொல்லவில்லை. முாறாக அவற்றை பயமுறுத்தி திரும்ப அனுப்புவதுடன், பொறிவைத்து பிடித்தல் போன்ற விடையங்களையே மேற்கொள்கின்றனர். இவற்றினூடாக அவர்கள் உயிரினங்கள் மீது வைத்துள்ள அன்பு புலனாகின்றது. இதனை கீழ்வரும் பாடலடிகளில் காணலாம்.

**"வரைசேர் வகுந்தின் கானத்துப் படினே**
**கழுத்தில் சேணோன் ஏவொடு போகி,.."**
***(மலைபடுகடாம், பாடலடி:240-255)***

### முடிவுரை

பத்துப்பாட்டு இலக்கியங்களின் இறுதி இலக்கியமான மலைபடுகடாம் கூத்தர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக்காட்டுவதுடன்

நன்னன் எனும் மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழுதப்பட்ட இலக்கியமாகும். இதில் கொடைச் சிறப்பு, ஆற்றுப்படுத்தல் என்பன பற்றியே அதிகமாக சிறப்பிக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளன. அத்துடன் மக்களது வாழ்க்கை முறை, பழக்கவழக்கம், பொருளாதாரம், தொழில்கள் என்பன பற்றியும் சிறப்பாக எடுத்து உரைக்கப்படுவதன் ஊடாக விழுமியக் கருத்துக்களும் சிறப்பாக எடுத்துரைக்கப் பட்டுள்ளதனைக் காணலாம்.

***உசாத்துணை***

*1. மணிகண்டன்.ப, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி, கோவை - 28.*

*2. இராசமாணிக்கனார்.மா, (1970), பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு.*

*3. பக்தவக்சலபாரதி, (2019), பண்பாட்டு மானிடவியல், அடையாளம் பதிப்பகம், திருச்சி.*

*4. இளங்கோவன். மு,* http://muelangovan.blogspot.com/2008/01/blog-post.html?m=1, *கட்டுரை.*

*5.* www.sangathamizh.com. *மலைபடுகடாம் மூலமும் உரையும்.*